Registered as a Newspaper  பக்கங்கள் 04  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  ஆடி 19  [ 03-08-1993 ]  செவ்வாய்க்கிழமை  ஓசை 166

## பிரயோக கணிதம் பரீட்சை ரத்து
## 23, 24 இல் நடைபெறுமென அறிவிப்பு

நேற்று நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சை பிரயோக கணிதம் I, இன்று நடைபெறவிருந்த பிரயோக கணிதம் - II ஆகிய வினாத்தாள்கள் சகல மொழிகளிலும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற பிரயோக கணித தமிழ் மொழிமூல வினாத்தாளில் இன்று நடைபெறவிருக்கும் தமிழ்மொழிமூல பிரயோக கணிதம் - II இன் சில வினாக்கள் இடம்பெற்றிருந்த காரணத்தினாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார். அச்சிடுதலின் போது இந்த தவறு நேர்ந்துள்ளதாகவும் இதனால் இன்று நடைபெறவிருந்த பிரயோக கணிதம் - II வினாத்தாள் நடைபெறமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். பிரயோக கணிதம் வினாத்தாள் - I, II புதிதாக இம்மாதம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை; கைதிகள் குறித்து அக்கறையில்லை!

## தாக்குதல் திட்டம் தயார் என்கிறது பி. பி. ஸி.

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. மணலாற்று பிரதேசத்தில் மண்கிண்டி மலை இராணுவமுகாம் மீது நடத்திய தாக்குதலில் ஏற்பட்ட இழப்பைத் தொடர்ந்து இப்புதிய தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பி. பி. ஸி நேற்றிரவு அறிவித்தது. மேலும் இத் தாக்குதல் திட்டம் காரணமாக விடுதலைப் புலிகளிடம் உள்ள போர்க் கைதிகளின் விவகாரம் குறித்து அரசாங்கம் பெரிதும் அக்கறை காட்டவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மணலாறு மண்கிண்டிமலை சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாக பி.பி ஸி. தெரிவித்தது

இந்த இராணுவ நடவடிக்கைக்கு அரசு ஆயத்தமாக இருப்பதால் தற்போது யுத்தக் கைதிகளாகவுள்ள பொலிசாரினதும் இராணுவத்தினரினதும் விடுதலை தொடர்பாக அரசு தற்போது நடவடிக்கை எடுக்கும் நிலையில் இல்லை என்றும் பி. பி. ஸி. குறிப்பிட்டது

## சர்வதேச செஞ்சிலுவையிடம்
## கைதிகளை விடுவிக்க உதவுமாறு பெற்றோர்கள் கோரிக்கை

(கொழும்பு)

யுத்தக் கைதிகளாக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 33 இராணுவ, பொலிசாரையும் விடுவித்து தருமாறு கைதிகளின் உறவினர்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு கிளை முன் கூடி கோரிக்கை விடுத்தனர்.

மீண்டும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகள் விடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரைத் தலையிட்டு அவர்களை விடுவித்துதருமாறு இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இவர்கள் விடுத்த இக் கோரிக்கை தொடர்பாக பதிலளித்த அவ் அதிகாரிகள் கைதிகள் விடுதலை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நிகழும் பேச்சுவார்த்தைகளுக்கு உதவ முடியுமே தவிர விடுதலை செய்யுமாறு கோரிக்கை விட முடியாது என தெரிவித்துள்ளனர்.

## படகு சேவை கலந்துரையாடல் நாளை

இன்று காலை 10 மணிக்கு நடைபெற இருந்த கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள், ஓட்டுனர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற மாட்டாதெனவும், இக் கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு அலிப்பளை படகுத்துறையில் நடைபெறும் எனவும் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கிளாலிச் சம்பவத்தில் 2 பெண்களை காணவில்லை

(தென்மராட்சி)

கடந்த 28ஆம் திகதி கிளாலிக் கடலில் கடற்படையினர் மேற்கொண்ட படுகொலையின்போது இரு சகோதரிகள் காணாமற் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. முகமாலையை சேர்ந்த திருமதி செல்வராசா மாரியம்மா (45), திருமதி ஜேசுதாசன் சின்னம்மா (51) ஆகிய இருவருக்குமே என்ன நடந்தது என்பது தெரியவில்லை

இவர்கள் பயணம் செய்த படகில் இருவரினதும் தேசிய அடையாள அட்டைகளும் பொதிகளும் கண்டெடுக்கப்பட்டு தற்போது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் தமது பேரன் கொழும்பில் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதை அறிந்து அங்கு சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தவர்கள் எனத்தெரியவருகிறது.

இதேசமயம் மேலும் சிலரை காணாத அவர்களது உறவினர்கள் கிளாலிக் கரையில் கூடி பயணிகளை விசாரித்த வண்ணம் இருக்கின்றனர்.

(86)

## வீரச்சாவு



லெப். தில்லைச்செல்வி

[சத்தியா]

எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் பெண் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் தில்லைச் செல்வி/ சத்தியா (நித்தியானந்தம் பிறேமாவதி, பொன்னாலை மேற்கு சுழிபுரம்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## சுவீடனில் இலங்கை அகதிகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(ஸ்ரொக்கோம்)

அகதிகளை திருப்பியனுப்புவது தொடர்பாக கொண்டுவரப்பட்டுள்ள புதிய குடியேற்ற விதிகளை ஆட்சேபித்து இலங்கையர் கடந்த மாதம் சுவீடனில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். சுவீடனில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளவர்கள் சார்பாக சுமார் 200 பேர் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை தலைநகர் ஸ்ரொக்கோமின்மையப்

களை சுவீடனில் உள்ள சிறிலங்கா தூதரகம் சுவீடன் அரசுக்கு தெரிவித்திருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குரலெழுப்பினர். இலங்கைத் தீவில் தமக்கென எந்த பாதுகாப்பு வலயமும் இல்லை. சுவீடனில் பொருளாதார அகதிகள் என்று இலங்கையர் எவரும் தங்கியிருக்கவில்லை தீவிற்கு சென்றால் கொல்லப் படுவோம் என்பதாலேயே இங்கு தங்கியிருக்கின்றோம்

கொலைகளை நிறுத்திடச் செய்யவும், மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பித்திடுமாறும் சுவீடன் அரசு சிறிலங்கா அரசை நிர்ப்பந்திக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். இதன் மூலம் அகதிகள் பிரச்சினையும் ஏற்படாது. இங்குள்ள அகதிகளும் தாயகம் திரும்பக் கூடியதாக இருக்கும்.

மோதல்கள் நீடிக்கும்வரை தஞ்சம் கோருபவர்களுக்கு

## உண்ணாவிரதத்தை நிறுத்துக!

சர்வதேச செஞ்சிலுவையிடம்

எடுக்கும் நிலையில் இல்லை என்றும்பி.பி.ஸி.குறிப்பிட்டது

இவர்கள் பயணம் செய்த படகில் இருவரினதும் தேசிய அடையாள அட்டைகளும்

கூடி பயணிகளை விசாரித்த வண்ணம் இருக்கின்றனர். (86)

லைப் புலிகள் தமது வீரவணக் கத்தைத் தெரிவித்துக்கொள் கின்றனர்.

# கைதிகளை விடுவிக்க உதவுமாறு பெற்றோர்கள் கோரிக்கை

(கொழும்பு)

யுத்தக் கைதிகளாக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 33 இராணுவ, பொலிசாரையும் விடுவித்து தருமாறு கைதிகளின் உறவினர்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு கிளை முன் கூடி கோரிக்கை விடுத்தனர்.

மீண்டும் உண்ணா விரதத்தை மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகள் விடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரைத் தலையிட்டு அவர்களை விடுவித்துதருமாறு இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இவர்கள் விடுத்த இக் கோரிக்கை தொடர்பாக பதிலளித்த அவ் அதிகாரிகள் கைதிகள் விடுதலை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நிகழும் பேச்சுவார்த்தைகளுக்கு உதவ முடியுமே தவிர விடுதலை செய்யுமாறு கோரிக்கை விட முடியாது என தெரிவித்துள்ளனர்.

## படகு சேவை கலந்துரையாடல் நாளை

இன்று காலை 10 மணிக்கு நடைபெற இருந்த கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள், ஓட்டுனர்களுக்கான கலந்துரையாடல் நடைபெற மாட்டாதெனவும், இக் கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு அலைப்பளை படகுத்துறையில் நடைபெறும் எனவும் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

# சுவீடனில் இலங்கை அகதிகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(ஸ்ரொக்கோம்)

அகதிகளை திருப்பியனுப்புவது தொடர்பாக கொண்டுவரப்பட்டுள்ள புதிய குடியேற்ற விதிகளை ஆடசேபித்து இலங்கையர் கடந்த மாதம் சுவீடனில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். சுவீடனில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளவர்கள் சார்பாக சுமார் 200 பேர் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை தலைநகர் ஸ்ரொக்கோமின்மையப் பகுதியில் நடத்தினர்.

இலங்கையர் குறித்த தவறான பொய்யான தகவல்களை சுவீடனில் உள்ள சிறிலங்கா தூதரகம் சுவீடன் அரசுக்கு தெரிவித்திருப்பதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குரலெழுப்பினர். இலங்கைத் தீவில் தமக்கென எந்த பாதுகாப்பு வலயமும் இல்லை. சுவீடனில் பொருளாதார அகதிகள் என்று இலங்கையர் எவரும் தங்கியிருக்கவில்லை தீவிற்கு சென்றால் கொல்லப் படுவோம் என்பதாலேயே இங்கு தங்கியிருக்கின்றோம் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோஷமிட்டனர்.

கொழும்பு வடக்கு, கிழக்கு பகுதியில் சிறிலங்கா அரசு படுகொலைகளை நிறுத்திடச் செய்யவும், மீண்டும் சமாதானப் பேச்சை ஆரம்பித்திடுமாறும் சுவீடன் அரசு சிறிலங்கா அரசை நிர்ப்பந்திக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். இதன் மூலம் அகதிகள் பிரச்சினையும் ஏற்படாது. இங்குள்ள அகதிகளும் தாயகம் திரும்பக் கூடியதாக இருக்கும்.

மோதல்கள் நீடிக்கும்வரை தஞ்சம் கோருபவர்களுக்கு தஞ்சம் அளித்திட வேண்டும் என ஆர்ப்பாட்ட பேரணியின் போது விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உண்ணாவிரதத்தை நிறுத்துக! யாழ். அரச அதிபர் அவசர செய்தி

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ள 33 போர்க் கைதிகளையும் உண்ணா விரதத்தை உடனே கைவிடுமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைத்த அவசர வானொலிச் செய்தி மூலமே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தான் யாழ்ப்பாணம் திரும்பும்வரை உண்ணா விரதத்தை மேற்கொள்ள வேண்டாம் என அவர் மேலும் கோரிக்கை உண்ணாவிரதிகளை விடுத்துள்ளார்.

யாழ். அரச அதிபர் கொழும்பு பயணமாக முன்னர் உண்ணாவிரதிகள் தமது போராட்டத்தை ஆரம்பித்த முதலாவது தினம் யாழ் அரச அதிபர் அவர்களும் பார்வையிட்டமை தெரிந்ததே.

## அரச அதிபரின் அறிவிப்பு உத்தியோகபூர்வமானதல்ல

### உண்ணாவிரதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், அரசாங்க அதிபர் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு உத்தியோக பூர்வமாக அறிவிக்காத நிலையல் அதனை நம்பி எமது போராட்டத்தை எவ்வாறுகைவிடுவது? எனவும் எனவே இன்று காலை 11 00 மணி முதல் நீரருந்தாது உண்ணா விரதத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் உண்ணாவிரதிகள் நேற்று எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

அவரின் அறிவித்தல் உத்தியோகபூர்வமானதாக அமைந்திருந்தால் நீரருந்தி உண்ணாவிரதத்தை தொடர்ந்திருப்போம் எனவும் கொழும்பில் அவரின் நடவடிக்கை தொடர்பான முழுவிபரமும் அறியாது உண்ணாவிரதத்தை எவ்வாறு கைவிடுவது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

சாகும்வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டுவரும் 33 யுத்தக்கைதிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் கத்தோலிக்க திருச்சபையினர் சென்று பார்வையிட்டனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிட பிரதிநிதி மற்றும் மேற்படி சங்க இரு பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டதுடன் கொழும்பு திரும்பிய சில கைதிகளின் பெற்றோர் அனுப்பிய கடிதங்களையும் ஒப்படைத்ததுடன் இவர்களது பதிலையும் பெற்றுச் சென்றனர்.

இதேவேளை யுத்தக்கைதிகளை பார்வையிட்ட கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார் திருப்பலிஒப்புக் கொடுத்தனர் (நீ)

## இளைஞர் கைது

[கொழும்பு]

கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் கடந்த நான்கு தினங்களாக பொலிசார் தேடுதல் நடத்தி பல தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது

# தலைவர் பிரபாகரனுக்கு உறவினர் கடிதம்

மனித நேய அடிப்படையில் விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாகத் தடுத்துவைக்கப் பட்டிருப்போரை விடுதலை செய்யுமாறுகோரி கைதிகளின் உறவினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக பி. பி. ஸி. செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள 33 பொலிசார் மற்றும் இராணுவத்தினரையும் மனித நேயத்தின் அடிப்படையில் விடுதலை செய்யுமாறு இவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கடிதம் ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விடுதலைப் புலிகளின் தலைவருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளதாகவும் அது மேலும் தெரிவித்தது.

இவ் யுத்தக்கைதிகள் சாகும் வரையான உண்ணா விரதத்தை இரண்டாவதுதடவையாக மீண்டும் ஆரம்பித்து நேற்றுடன் 5 நாட்கள் பூர்த்தியாகி யுள்ளமை தெரிந்ததே.


## உண்ணாவிரதி ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஐந்தாவது நாளாக நேற்று உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளின் உடல்நிலை மேலும் மோசமடைந்துள்ளது. இவர்களில் ஒருவர் நேற்றுக் காலை மயக்கமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பியந்த என்பவரே இவ்வாறு மயக்கம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தகவல் தரவும்



பொதுமக்கள் தந்த புகார்களின் அடிப்படையில் சங்கானை அவசர அனுமதி வழங்கும் செயலகத்தில் உதவியாளராகக் கடமை புரிந்த சுப்பிரமணியம் காசி விஸ்வநாதன், கண்ணகை அம்மன் கோவிலடி வட்டுக்கோட்டை மேற்கு என்னும் முகவரியில் வசிப்பவர் 19 பேர்களிடம் பணம் பெற்றுக்கொண்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே இவரது சொந்தப் பெயரிலோ. அல்லது மாற்றுப் பெயரிலோ இவருடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் இவர் பற்றி மேலதிக தகவல் அறிந்தவர்கள் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் கோண்டாவில் புகையிரத வீதியில் அமைந்துள்ள விசாரணைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு அறியத் தரும்படி பொதுமக்களை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## பட்டதாரி பயிலுநருக்கு செப்டெம்பரில் நியமனம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களின் நியமனங்கள் எதிர் வரும் செப்டெம்பர் மாதம் முதல் வழங்கப்படவுள்ளதாக கல்விச் சேவைகள் சபை அறிவித்துள்ளது.

மேற்படி பட்டதாரி ஆசிரியர்களில் கொட்டக்கலைக்கு பயிற்சிக்குச் செல்லாதோர்பட்டதாரி ஆசிரியர்களுக்கான பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகள் இதுவரை கிடைக்காதோர் பரீட்சைக்கு விண்ணப்பித்தும் பரீட்சைக்குத் தோற்றாதோர் ஆகியவர்களுக்கே மேற்படி நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களின் பெயர்ப்பட்டியலை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் ஏற்கனவே கொழும்பு சென்றிருந்தபோது கல்விச்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## ஐந்து தமிழ் இளைஞர்கள் தாண்டிக்குளத்தில் தடுப்பு

வடபகுதி இளைஞர்கள் ஐவர் தாண்டிக்குளம் தடை முகாம் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நேற்றைய தினம் தடுத்து வைக்கப்பட்ட ஐந்து தமிழ் இளைஞர்களும் 20 முதல் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் எனவும் இவர்கள் ஐவரும் வடபகுதியிலிருந்து வவுனியா நோக்கி சென்றவர்களெனவும்தெரியவந்துள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் வடபகுதிக்கு வெளியே சென்ற பயணிகளை இராணுவத்தினர் புகையிரதப்பாதையூடாக பயணம் செய்யுமாறு வற்புறுத்தியதாக தெரியவந்துள்ளது.

## பிளாஸ்ரிக் பொருள்களுக்கு மீண்டும் தடைவிதிப்பு

(வவுனியா)

வடபகுதிக்குள் எடுத்துவரும் சில பொருள்களுக்கு மேலதிக தடையை தாண்டிக்குள இராணுவத்தினர் விதித்துள்ளனர்.

முன்னைய காலங்களில் வடபகுதிக்கு எடுத்துச் செல்ல சில பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இதில் சில பொருள்களுக்குரியதடை தளர்த்தப் பட்டிருந்தது. ஆனால் நேற்று முதல் நைலோன் கயிறு மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## ஆதாரம் காட்டி பெறவும்

வவுனியா நொச்சிமோட்டையில் அமைந்துள்ள பயணிகள் சோதனை நிலையத்தில் ஓர் ஆண்களுக்கான கைக்கடிகாரமும், மூன்று பெண்களுக்கான

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## வரி விளம்பரம்

### ஸ்ரீச ந்ச்பக்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள், ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மட்றாஸ் டிக்செனெறி) கொமிக்ஸ் மங்கை மலர் கழிவுவிலையில் நல்லூர் உற்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்தி புத்தகசாலை, நல்லூர்
(சி-7071)

### தேவை

¼'' (அங்குலம்) இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½' (அடி) க்கு மேல்இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப் பகுதி, த.மொ.மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-7098)

### இலவச அக்குபஞ்சர் சிகிச்சை

01-08 93 ஞாயிற்றுக்கிழமை முதல் 35, ஐந்து சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தால் இலவச வைத்திய சேவை நடைபெறும். தலைவர் Dr T. புவிராசன் (5579)

### சலனம்

சென்னைபிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் மற்றிய இருமாத சினிமாஇதழ் கிடைக்குமிடம்: வசந்தம புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி. யாழ்ப்பாணம். (5592)

### லக்ஷ்சுமி வைத்தியம்

வாதரோகம், மாதவிடாய், குடற்புண், செங்கமாரி, அனல்வாதம், முறிவு நெறிவு, உழுக்கு சுளுக்கு, சிறுபிள்ளைகளுக்கு டணி தோஷம்போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த முறையில் வைத்தியம் செய்பவர் வைத்தியர் செ கந்தையா பஸ் டிப்போ அருகாமை, பலாலி றோட், சோண்டாவில். (5598)

### றேடியோ மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங் கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலெக்ரோனிக் கடிகாரங்கள் 90/-, 150/- மேசை


# இலங்கை பௌத்தர்களை மதமாற்ற சதி முயற்சி நடக்கின்றது?

— முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியா

(கொழும்பு)

இலங்கைப் பௌத்தர்களை மதமாற்றம் செய்யும் சதி முயற்சி ஒன்று நடைபெறுவது தொடர்பான நம்பத் தகுந்த சில விபரங்கள் கிடைத்திருக்கின்றன இவ்வாறு மாபோதி சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரியா கூறியுள்ளார்.

இரத்மலான பௌத்த இளைஞர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவிருப்பது பற்றி வதந்தி ஒன்று கிளப்பப்பட்டிருக்கிறது. நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி ஒற்றுமைப்பாடான கருத்துக்கள் இல்லாத நிலையில் தேசிய என்ற வார்த்தையை பயன்படுத்துவதில் அர்த்தமில்லை. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், காமினி திசநாயக்காவும். ரொனிடி மெல்லும் ராஜிவ்காந்தி - ஜெயவர்த்தன உடன்பாட்டை செய்ய ஒற்றுமையாக செயல்பட்டவர்கள். காமினி திசநாயக்கா தேசிய அரசின் மூலம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் சகல ஷரத்துக்களையும் செயற்படுத்துவோம் என்கிறார் இது விடயம் தொடர்பான ஜனாதிபதியின் கருத்து தெளிவாக தெரியவரவில்லை. ரொனி டிமெல்லும் தேசிய அரசுடன் சேர விரும்புகிறாராம். அமைச்சர் பதவிக்காக தேசிய அரசில் இணையாமல் நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி ஒருமைப்பாடான கருத்து ஒன்றை உருவாக்கி ஏற்றுக் கொள்வதே நல்லது. நான் விரோதத்தால் பேசவில்லை என்னுடைய சிங்கள இனம் பற்றிய உணர்வினாலேயே ஆகும்.

2000 ஆம் ஆண்டுக்கு முன்பாக இலங்கையில் உள்ள சகல பௌத்தர்களையும் ஏனைய மதங்களுக்குமாற்றம் செய்யவும்சதிகள் நடக்கின்றன என்றும் தெரிவித்தார்.

## இலவச தையல் பயிற்சி

(தொல்புரம்)

இராணுவ வன்முறையால் தமது நிரந்தர வதிவிடங்களை விட்டு இடம் பெயர்ந்தோர்க்கான இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 34 இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள ஐம்பதிற்கும் மேற்பட்ட யுவதிகளுக்கு தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் மருதனார்மடம் பிரதேச நிலையத்தில் பிரதேச இணைப்பாளர் எஸ் நேசராஜ் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப விழா வைபவத்தில் மாவட்ட இணைப்பாளர் பா. செல்வரத்தினம் அவர்கள் மங்கள விளக்கேற்றி பயிற்சிவகுப்பினைஆரம்பித்து வைத்தார். (41)

## வயோதிபர் திடீர் மரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறை காவல்துறை பணிமனைக்கு விசாரணைக்குச் சென்றிருந்த வயோதிபர் ஒருவர் அங்குள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்த போது மயக்கம் ஏற்பட்டு நிலத்தில் விழுந்து மரணமானார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. மரண விசாரணையை மேற்கொண்ட அதிகாரி திரு. வீ. நடராசா இயற்கை மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

புலோலி கிழக்கைச் சேர்ந்த இளையதம்பி பரம்சோதி (வயது 74) என்பவரே இவ்வாறு மரணமானார். (யோ)

## அரசியலமைப்பு மறுபரிசீலனை

# பாராளுமன்ற தெரிவுக்குழு இவ்வாரம் நியமனம்?

(கொழும்பு)

அரசியலமைப்பை மறு பரிசீலனை செய்வது மற்றும் பாராளுமன்ற அமைப்பு முறைகளை மாறுவது, ஜனாதிபதி ஆட்சி முறையை கைவிடுவது என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று இவ்வாரம் அமைக்கப்படவுள்ளது

இத் தெரிவுக்குழு, தேர்தல் முறையில் மாற்றம் செய்வது தொடர்பாகவும் ஆராயவுள்ளது.

# சிறிலங்காவில் 500 கோடி கறுப்புப் பணம் உள்ளதாம்

சிறிலங்காவில் 500 கோடி ரூபா கறுப்புப் பணம் உள்ளதாக அரசு மதிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கறுப்புப்பணத்தை வெளிக்கொண்டுவர பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ள தாகவும் ஆனால் இத் திட்டங்கள் பெருமளவில் வெற்றிபெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இத்திட்டங்களால் சுமார் 100 கோடி ரூபா கறுப்புப்பணம் கூட வெளியே வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.


## காணவில்லை

பெண், பெயர் இராசம்மா

வயது: 74, மனநோயாளி, நிறம் சிவப்பு, தலைமுடி கிறில் வெட்டு, சட்டை அணிபவர், கடைசியாகச் சனிக்கிழமை அணிந்திருந்தது மண்ணிற பெரிய செக் சட்டை.

தயவுசெய்து தகவல் கிடைப்பின் கீழேயுள்ள முகவரிக்கு அறிவிக்கவம்.

ஜீவன், சந்தையடி, மானிப்பாய்.
வ. சிவயோகநாதன். (மகன்)
(5605)

## VACANCY

Save the Children Fund (U. K) is an International Non Governmental Organisation working for the rights and welfare of children irrespective of nationality, race or religion. The following vacancy exist in the Organisation.

### ASSISTANT DISTRICT Coordinator - Jaffna

The post holder will be responsible for the deve-lopment implementation of projects and day to day mana-gement of SCF project staff She / He will support the District Coordinator in the overall programme management The successful candidate will have -

a. A minimum of five years experience in Relief -Rehabilitation Development work.

b. Excellent organisational, administrative and financial skill.

c. Fluency in spoken and written Tamil and English The post holder will be required to


## 2-ம் ஆண்டின் நீங்காத நினைவுகள்



மாணிக்க முத்தாய்:
24-12-77

மறத்தலைவர் சொத்தாய்:
03-08-91

### வீரவேங்கை இன்பம் (நடராசா ரஞ்சித்குமார்)

எழுந்துவா இன்பம் உன்நெஞ்சில்
விரிந்திருக்கும் வீரத்திற்கும்

## நினைவு கூருகின்றோம்...

### 1993-08-03

1988ஆம் ஆண்டு இதேதினத்தில் இந்தியப் படையினர் கைது செய்ய முற்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**மகிந்தன்** ( — — முல்லைத்தீவு)

**பரதன்** ( — — யாழ்ப்பாணம்)

1990ஆம் ஆண்டு மட்டு - பாலையடி வெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஆனந்** [அருச்சுனன் ஜெகநாதன்-நாகமுனை, அம்பிலாந்துறை - மட்டு]

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**றிஸ்வான்** [சுந்தரம் — - கருப்பட்டைமுறிப்பு - முல்லைத்தீவு]

யாழ். பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கடற்புலி கப்டன் நெல்சன்** [இரத்தினம் ஜெயபாலசிங்கம் - மயிலிட்டி - யாழ்]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டு - பெரியநீலாவணை-1 ஐச் சேர்ந்த தமிழிளைஞன்.

முல்லைத்தீவில் சிறிலங்கா விமானப் படையினர் பரவலாக மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களின்போது சிலாவத்தை மற்றும் மணலாறு, அளம்பில் பகுதியிலும் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

வவுனியா - பாலமோட்டைப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட இளம்பெண்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு ஆ. க வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். சுனேந்திரா** [ஜெயந்தினி வேலாயுதபிள்ளை - கல்குடா - மட்டு]

**கப்டன் சாரா** [இமானுவேல் ஜோன்சன் - உவர்மலை - திருமலை]

**கப்டன் திலகா** [ரதீஸ்வரி இராசதுரை - 6-ம் வட்டாரம் மூதூர் - திருமலை]

**2-ம் லெப். கென்றி** [சின்னராசா சிறுரங்கன் - 6-ம் வட்டாரம். கும்புறுப்பிட்டி - திருமலை]

**விமலசுந்தரம்** [வீரசிங்கம் தெய்வநாயகம் - மேற்கு கொலனி, தம்பலகமம் - திருமலை]

**சிவா** [செல்லப்பிள்ளை தங்கத்துரை - பள்ளிக்குடியிருப்பு தோப்பூர் - திருமலை]

**பாண்டியன்** [செல்வராசா சிவநாதன் - நாயன்மார்திடல் தம்பலகமம் - திருமலை]

**முத்துக்குமார்** [அருந்தவராஜா அங்கயற்கண்ணன் -215, திருஞானசம்பந்தர் வீதி, திருமலை]

**குமணன்** [பரமகுமார் தியாகராஜா - 4-ம் குறுக்குத் தெரு - திருமலை]

**சஜீத்/தபீன்** [தம்பையா லோகநாதன் - 7-ம் வட்டாரம், மூதூர் - திருமலை]

**சர்வேஸ்** [முருகேசு தனேஸ்வரன் -பன்குளம் - திருமலை]

**ஹிட்லர்** [பத்திரியன் பரணிதரன் - மேன்கமம், மூதூர் - திருமலை]

வீதி. யாழ்ப்பாணம். (5592)

## லக்ஷ்சுமி. வைத்தியம்

வாதரோகம், மாதவிடாய், குடற்புண், செங்கமாரி, அலல் வாதம், முறிவு நெறிவு, உழுக்கு சுழுக்கு, சிறுபிள்ளைகளுக்கு டணி தோஷம்போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த முறையில் வைததியம் செய்பவர் வைத்தியர் செ கந்தையா பஸ் டிப்போ அருகாமை, பலாலி றோட், சோண்டாவில். (5598)

## றேடியோ மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங் கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலெக்ரோனிக் கடிகாரங்கள் 90/-, 150/- மேசை சுவர் மணிக்கூடுகள் 100, 200/- றேடியோ மட்டும் 150/- கசற் றேடியோ—200/ இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி7113)

## தவறிவிட்டது

2-8-93, 12-00 மணியளவில் யாழ். நகரிலிருந்து நல்லூருக்கு மணல்தரை வீதி வழியாக செல்கையில், கருநீல பிறேம் மூக்குக்கண்ணாடி மஞ்சள் நிறக் கவருடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து த.ஞானலிங்கம் (பாலா) இல 6, சங்கிலியன் வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5606)

## தவறிவிட்டது

2/8/93 பி ப 4 20மணிக்கும் 5 மணிக்கும் இடையில் சாவகச்சேரி - கச்சாய் வீதிக்கும் கண்டிவீதி - கைதடிக்குமிடையில் பணம் தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் ஈழநாதம், 31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (இ)

## நல்லூரில் வைத்திய சேவை

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளையினர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கு அருகில் கோவில் வீதியில் உள்ள தமது பணிமனையில் ஆலயத்துக்கு வரும் பொது மக்களின் நன்மை கருதி காலை தொடக்சம் மாலை ஒன்பது மணி வரை வைத்திய சேவையை நடாத்தி வருகின்றார்கள். (24)



மாணிக்க முத்தாய்:

24-12-77

மறத்தலைவர் சொத்தாய்:

08-08-91

## வீரவேங்கை இன்பம் (நடராசா ரஞ்சித்குமார்)

எழுந்துவா இன்பம் உன்நெஞ்சில்
விரிந்திருக்கும் வீரத்திற்கும்
உன்கரங்கள் அணைத்து எடுத்த
துப்பாக்கிக்கும் உயிர் கொடுத்து
மீண்டும் ஒருதடவை இந்த மண்ணிற்காக
எழுந்து வா இன்பமே!
ஆகாயக் கடல் வெளி எங்கும்
உன்னை தேடுகின்றோம் மீண்டும்
ஒரு தடவை எழுந்து வா.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

டச்சுறோட்,
சாவகச்சேரி.

இவரது நினைவால் துயருறும்
அம்மா மாணிக்கம், சித்தப்பா
வில்வராசா, அண்ணா நிஷந்தகுமார்,
(5600) தங்கைகள் தங்கா, வாணி.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:

11-08-74

★ ★

வீரச்சாவு:

27-07-91

## லெப். வினோத் (தர்மலிங்கம்தயாளன்)

திவசத்திதி: 03-08-93

திக்கத்தில் மலர்ந்த தூயவனே தயாளா
ஈழப் போருக்கு உனை அர்ப்பணித்தாய்
ஆனையிறவில் உயிர்நீத்த லெப். விநோததே
மாவீரர் பெயருடன் மங்காப்புகழ் பெற்றாய்
எங்களை மீளாத்துயரில் ஆழ்த்திய தயாளா
உன்பிரிவால் நிதமும் நாங்கள் வாடுகிறோம்.

ஆண்டிதோட்டம்,
திக்கம்.
அல்வாய்,
(5598)

சகோதரன் அரவிந்தன்
சகோதரி மாலதி
அப்பம்மா பெரியப்பா
குடும்பத்தினர்.

# VACANCY

Save the Children Fund (U. K) is an International Non Governmental Organisation working for the rights and welfare of children irrespective of nationality, race or religion. The following vacancy exist in the Organisation.

## ASSISTANT DISTRICT Coordinator - Jaffna

The post holder will be responsible for the deve-lopment implementation of pr jects and day to day mana-gement of SCF project staff She / He will support the District Coordinator in the overall programme management The successful candid-te will have -

a. A minimum of five years experience in Relief -Rehabilitation Development work.

b. Excellent organisational, administrative and financial skill.

c. Fluency in spoken and written Tamil and English The post holder will be required to live in Jaffna Minimum salary Rs 6, 205/- plus medical benefits.

**CLOSING DATE TWO WEEKS FROM ADVERTISEMENT OF THE POST**

Please Send Applications to The SCF Jaffna Office
SAVE THE CHILDREN FUND (U. K.)
"KARUVEMBAN VALAVU,"
RAJAVEETHY,
THIRUNELVELY EAST.

(சி-7116)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## இராசையா செல்லம்மா

மலர்வு:
15.08.1915

உதிர்வு:
03.08.1990

பாசத்தோடு அருமையாக நீ பெற்ற பிள்ளை
நேசமுள்ள மருகனையும் நீ பெற்றாய் - கூட
ஆசையோடு பேரர் ஐந்து பேரை வளர்த்தாய்
ஈரமுள்ள நெஞ்சத்தோடு அணைத்து நின்றாய்
சோர்ந்தழுது நாமிருக்க அம்மம்மா - நீ
சேர்ந்த இடம் செப்பவில்லை, தேடுகின்றோம்

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
(5603)

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

னான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். சுனேந்திரா [ஜெயந்தினி வேலாயுதபிள்ளை - கல்குடா - மட்டு]
கப்டன் சாரா [இமானுவேல் ஜோன்சன் - உவர்மலை - திருமலை]
கப்டன் திலகா [ரதீஸ்வரி இராசதுரை - 6-ம் வட்டாரம் மூதூர் - திருமலை]
2-ம் லெப். கென்றி [சின்னராசா சிறுரங்கன் - 6-ம் வட்டாரம். கும்புறுப்பிட்டி - திருமலை]
விமலசுந்தரம் [வீரசிங்கம் தெய்வநாயகம் - மேற்கு கொலனி, தம்பலகமம் - திருமலை]
சிவா [செல்லப்பிள்ளை தங்கத்துரை - பள்ளிக்குடியிருப்பு தோப்பூர் - திருமலை]
பாண்டியன் [செல்வராசா சிவநாதன் - நாயன்மார்திடல் தம்பலகமம் - திருமலை]
முத்துக்குமார் [அருந்தவராஜா அங்கயற்கண்ணன் -215, திருஞானசம்பந்தர் வீதி, திருமலை]
குமணன் [பரமகுமார் தியாகராஜா - 4-ம் குறுக்குத் தெரு - திருமலை]
சஜீத்/தமீன் [தம்பையா லோகநாதன் - 7-ம் வட்டாரம், மூதூர் - திருமலை]
சர்வேஸ் [முருகேசு தனேஸ்வரன் -பன்குளம் - திருமலை]
ஹிட்லர் [பத்திரியன் பரணிதரன் - மேன்கமம், மூதூர் - திருமலை]
முகிலா [தேவிகா ஞானப்பிரகாசம் - கண்டாவளை, பரந்தன் கிளிநொச்சி]
2-ம் லெப் நிசாந்தி [லெட்சுமீ வைத்திலிங்கம் - காட்டு வளவு - வல்வெட்டித்துறை]
2-ம் லெப். அருண் (கோவிந்தசாமி அருளானந்தம் - மாதகல் மேற்கு - யாழ்)
இன்பன் (நடராசா றஞ்சித்குமார் - கச்சாய்வீதி, சாவகச்சேரி - யாழ்)
பிரதீப் (நாகமுத்து செல்வராஜா - புன்னாலைக்கட்டுவன் - யாழ்)
தயா (பாரதிதேவி செல்லையா - சிவன்பண்ணை வீதி - யாழ்ப்பாணம்)
சுபத்திரா (வாணி புவனேந்திரன் - நறுவிலடி ஒழுங்கை - வல்வெட்டிததுறை)
சுபாசினி (புஸ்பா சுப்பிரமணியம் - உடுத்துறை வடக்கு -தாளையடி)
பவி (புஸ்பசாகினி சிவசுப்பிரமணியம் - காளி கோவிலடி, களபூமி - காரைநகர்)

மட்டு - சிறுத்தையன்கல் பகுதியில சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

2-ம் லெப். சுந்தரேஸ்வரன் (கணபதிப்பிள்ளை சந்திரன் - 1-ம் வட்டாரம், முனைக்காடு -மட்டு)

1992ஆம் ஆண்டு மட்டு - கரடியனாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2 ம் லெப். சேந்தன் நுகின் (பொன்ராமன் புஸ்பராசா- கதிர்காமம் - அம்பாறை)
லெப். விவேக்கா (சத்தியவாணி குணதுங்கா - குறிஞ்சி நகர், வாழைச்சேனை - மட்டு)
லெப். நிசாந்தி (ராஜேஸ்வரி தர்மலிங்கம் - சந்திவெளி, முறககொட்டாஞ்சேனை - மட்டு)
கப்டன் நடேஸ்வரன்/நடேஸ் (சிவகுரு சிறிகரன், பெரிய கல்லாறு - மட்டு)
தமிழ்வதனன்/மயூரன் (கந்தசாமி கருணரசா - நாசிவன் வீதி வாழைச்சேனை - மட்டு)
பெருமாள்/வில்வம் (சித்திரவேல் யோகராசா - வெல்லாவெளி - மட்டு)

மட்டு - அம்பிலாந்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சிவதர்சன்/மதிகரன் (கற்பூரப்போடி கோபாலப்பிள்ளை - குருக்கள்மடம் - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7112)

### சிந்தனைக்கு

தன் சிறகுகளை மட்டுமே துணையாகக் கொண்டு ஒரு பறவை, எவ்வளவு உயரமாகப் பறந்தாலும் அது, மிகையாகி விடாது.

— வில்லியம் பிளேக்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-08-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

க. பெ. எண்-05

## படுகொலைக்கு வாய்ப்பு வழங்குவதை தவிர்க்க

இனப்படுகொலை புரிவதில் சிங்களப் பேரின வாதம் குறியாக உள்ளது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தமிழரை அழித்தொழிப்பது என்பது அவர்களின் நீண்டகாலத் திட்டமும், செயற்பாடும் ஆகும். இவ்வாறாக இனப்படுகொலை புரிவதற்கான வாய்ப்பைத் தேடியலையும் பேரினவாதிகளுக்கு நாமும், சந்தர்ப்பத்தை வழங்குவதென்பது எமது தவறுமாகும்.

கடந்த 28ஆம் திகதி கிளாலிக் கடற்பரப்பில் இனப்படுகொலை ஒன்றை நடத்தியதற்கு இனவெறி பிடித்த சிங்களக் கடற்படையே காரணம் எனினும், தாக்குதலுக்குரிய சந்தர்ப்பத்தை வழங்கியதில் பங்கு எமக்கும் உண்டு என்றே கூறவேண்டும். அதாவது படகு கடற்புலிகளின் பாதுகாப்பு நேரத்திற்குப் பின்னரும் கடலில் தரித்திருந்தமையே இதற்கான வாய்ப்பைக் கொடுத்தது.

கிளாலிக் கடற்பரப்பில் சேவையில் ஈடுபடும் சகல படகுச் சொந்தக்காரர்களுக்கும் படகு ஓட்டிகளுக்கும் கடற்பரப்பில் கடற்புலிகளின் பாதுகாப்பு எவ்வளவு நேரம் வரையிலும் இருக்கும், தாம் யாழ். குடாக்கடல் நீரேரியைக்கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும் என்பவை எல்லாம் நன்கு தெரியும். ஆனால், இது குறித்துப் படகுச் சொந்தக்காரர்கள், ஓட்டிகள் அக்கறையாகவுள்ளனரா? என்பது கேள்விக்குரியதே.

இதனை வலியுறுத்துமாப் போன்றே படுகொலை இடம்பெற்ற படகுகளில் ஒன்றில் பயணம் செய்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய வயோதிபரின் பத்திரிகைப் பேட்டியும் உள்ளது. நேரம் கடந்துவிட்டது, பாதுகாப்பு கிடைக்காது என அவர் வற்புறுத்தியும் ஓட்டிகள் அவரின் கூற்றிற்குச் செவிசாய்க்கவில்லை எனத் தெரிகின்றது. அதாவது, ஒரு சாதாரண பயணி அபாயத்தைப்பற்றி எச்சரித்த போதும், ஓட்டிகள் அதைப்புரிந்து கொண்டதாகவோ, அக்கறை காட்டியதாகவோ இல்லை.

மேலும், கிளாலிக் கடற்பரப்பில் பயணத்திற்குப் பயன்படுத்தும் வெளியிணைப்பு இயந்திரங்கள், அடிக்கடி பழுதாவதும், எரிபொருள் (மண்ணெய்) பற்றாக்குறையால் இடை நடுவில் படகுகள் தத்தளிப்பதும் அடிக்கடி இடம் பெறும் சம்பவங்கள் ஆகும். இதுபற்றி பயணிகள் அநேக புகார்கள்தெரிவிக்கின்றார்கள். இவை இரண்டும் பொருளாதாரத் தடை மற்றும் சிறிலங்கா அரசாங்கத்தின் ...

# தென்னாசிய அரசுகளின் உறுதியற்றநிலை; ஆட்சிமுறை மீது கட்டுப்பாடு இழந்துள்ளன

இந்து சமுத்திரத்தில் உள்ள மாலைதீவைத் தவிர தெற்காசியாவில் உள்ள அரசாங்கங்கள் தாங்கள் தலைமை தாங்கும் ஆட்சி முறைகள் மீது கட்டுப்பாட்டை இழந்திருப்பதாகவே தோன்றுகின்றது.

இந்த சுழற்சி இந்தியாவிலேயே ஆரம்பமானது. நல்லதொரு அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதனைக் காட்டிலும் அரசியல் சுயநலங்களில் கூடுதலான சக்தியைச் செலவிடுவதன் மூலம் மட்டுமே பிரதமர் நரசிம்மராவின் சிறுபான்மை அரசாங்கம் உயிர் பிழைக்க முடிந்துள்ளது. இரு தீவிர இந்துக்கட்சிகளான பாரதீய ஜனதாக்கட்சி, மகாராஷ்டிராவின் சிவசேனை ஆகியவை தொடர்பான பிரதமர் ராவின் மென்மை நிலை அவரது ஆளும் காங்கிரஸ் கட்சிக்குள் பெரும் கருத்து வேறுபாடுகளைத் தூண்டியது. அவரது அமைச்சர்களில் ஒருவரான அர்ஜுன் சிங்கினால்ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஒரு அதிருப்தியாளர் குழு பிரதமரின் கொள்கைகளிலும் கட்சி மீதான அவரது தலைமையிலும் மாற்றம் ஏற்பட வேண்டுமென பகிரங்கமாக கோரிக்கை விடுத்தது.

இந்த நெருக்கடியை பிரதமர் ராவ் ஒருவாறு தணிக்க முடிந்தது. ஆனால் பங்குச் சந்தையைத் தகர்த்ததும் பெருந்தொகையானோரைக் கொன்றதுமான பம்பாய் குண்டு வெடிப்புக்களில் ஆரம்பித்து ஒன்றன்பின் ஒன்றாக ஊழல்களில் அவரது அரசாங்கம் இடறி விழுந்துள்ளது. முதலாவதாக இனக்கலவரங்களிலும் பம்பாய்க் குண்டு வெடிப்புக்களிலும் பின்னால் குற்றவாளிகள் அரசியல் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இரண்டாவதாக இந்தியாவின் வங்கி ஊழலில் உயர்தர அதிகாரிகளும் சில வேளைகளில் அமைச்சர்களும் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய ஊழல்களும் நடைபெற்றிருக்கலாம் இதற்கிடையே காஷ்மீரில் நடந்த பொலிஸ் கிளர்ச்சி சமீபத்தில் நடைபெற்றதாகும். அங்கு ஆயுதப் படைகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான மோதல் ''மினி வியட்நாம்'' வடிவைப் பெறும் பயமுறுத்தலை விடுக்கின்றது.

பங்களாதேஷில் நீதிமன்றத் தீர்ப்பொன்று அதன் ஆர்ப்பரிக்கும் அரசியல் வாதிகளில் உலகை நாசமாக்கியுள்ளது. எதிர்க்கட்சியான அவாமி லீக்கினால் ஒரு பாகிஸ்தானிய உளவாளியாக வர்ணிக்கப்பட்ட பழைமைவாத முஸ்லிம் தலைவரான குலாம் அஸாத் புரிந்ததாக கூறப்பட்ட குற்றச் செயல்கள் குறித்து ஒரு ஆண்டாக நிலவிய வதந்திக்குப் பின்னர் அஸாத் ஒரு பங்களாதேஷ் பிரஜை எனத் தீர்ப்பளித்த டாக்கா நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. ஆளும் பங்களாதேஷ் தேசிய கட்சி, அவாமி லீக் ஆகிய இரு பிரதான கட்சிகளை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கும் அளவுக்கு அஸாத்தின் ஜமாத்-ஈ-இஸ்லாமிய கட்சியின் ஆதரவாளர்களை இத்தீர்ப்பு ஒன்று திரட்டச் செய்தது.

இரு இமாலய ராஜ்யங்களான பூட்டானுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான உறவுகள் பூர்வீக நேபாளிகள் பிரச்சினை மீது முன்னர் ஒரு போதும் இல்லாத அளவுக்கு மோசமடைந்துள்ளன. சட்டவிரோதமாக குடி பெயருவோரின் பெரும் எண்ணிக்கையிலான வருகை குறித்து அச்சம் அடைந்த பூட்டான் தனது தெற்கு மாவட்டங்களில் இருந்து சுமார் அறுபதாயிரம் நேபாளி குடியேற்றக் காரர்களை வெளியேற்றியது. நேபாளத்தின் கிழக்கு மாகாணத்தில் அகதிகள் பிரச்சினையை இது உருவாக்கியது.

இப்பிரச்சினையைத் தீர்க்க இந்தியா தனது நல்லெண்ணத்தை வழங்க வேண்டுமென நேபாளம் விரும்பியது. ஆனால் இந்தியா இதற்கு மறுத்து விட்டது. ''பிராந்தியச் சண்டியனாக'' நடந்து கொள்வதாக இது மீண்டும் வர்ணிக்கப்படலாம் என்ற அச்சத்தினால் இது பெரும்பாலும் இவ்வாறு செய்யப்பட்டிருக்கலாம்.

இரு பிரதான அரசியல் தலைவர்களான லலித்அத்துலத்முதலி, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஆகியோரின் கொலைகளினால் இலங்கைத் தீவு முன்னர் எதிர்நோக்காத நெருக்கடி ஒன்றை எதிர்நோக்குகின்றது. ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்த அத்துலத்முதலி, ஜனாதிபதி ஜயவர்த்தனாவைத் தொடர்ந்து பதவிக்கு வருவார் என ஒரு கட்டத்தில் கவனிக்கப்பட்டார். ஆனால் பிரேமதாச அவரை சாதுரியமாகத் தோற்கடித்து அன்று தொட்டு அவரை கட்சியிலிருந்து வெளியேற்றுவதை ஒரு நோக்காகக் கொண்டார். இறுதியில் அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட தனது ஐக்கிய தேசிய முன்னணியை அவர் அமைத்தார். ஆனால் தேர்தல் பிரசார சமயத்தில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைத் தீர்த்துக்கட்ட ஜனாதிபதி பிரேமதாச உத்தரவிட்டிருக்கலாம் என்ற ஹேஷ்யங்களை அது எழுப்பியது.

மே முதலாந் திகதி தற்கொலை குண்டு நபர் ஒருவர் பிரேமதாசவின் ஊர்வலம் மீது மோதி அவரைக் கொன்றார். இக்கொலையின் பின்னால் எல்.ரி.ரி.ஈ. இருந்ததாகக் குற்றம் சாட்டப்படுகின்றது.

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷரீப்பின் அரசாங்கத்தைப் பதவி நீக்கி தேசிய சட்டசபையைக் கலைக்கும் ஜனாதிபதியின் உத்தரவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. பாகிஸ்தானின் 46 ஆண்டு வரலாற்றில்பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்று மீண்டும் பதவியில் அமர்த்த உத்தரவிட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

நீதிமன்றத்தின் எதிர்பாராத இந்த தீர்ப்பு தேசிய மாகாண சட்டசபைகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியிடமிருந்து அதிகாரம் கைமாறுவதை எடுத்துக்காட்டும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இன்றைய ஜனாதிபதியான குலாம் இஷாக்கான் அவரது நடவடிக்கைகளுக்காக பரவலாக கண்டிக்கப்பட்டார். இறுதியில் ஜனாதிபதி இஷாக்கானும் பதவி துறக்க நேர்ந்துள்ளது. பதவி துறந்துள்ள பிரதமர் நவாஸ் ஷெரிப் தேர்தலை நடத்த இணங்கியதையடுத்து புதிய தேர்தல்கள் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளன.

அரசியல் குழப்பங்களின் சுழற்சி தென் ஆசியாவில் அரசாங்கங்களையும் அமைப்புகளையும் உறுதியற்றதாக்கிவருவதாகத் தெரிகிறது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் ஆளும் அமைப்புகள் அவற்றின் ஒவ்வொரு அங்கங்களின் மீதும் கட்டுப்பாட்டை இனியும் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை. பாகிஸ்தானில் அரசியல் அதிகாரப் போட்டியில் ஜனாதிபதியும் பிரதமரும் பதவியிழந்துள்ளனர். இந்தியாவில் பிரதமர் நரசிம்மராவ் உண்மையிலேயே நாட்டை ஆளுவதற்கன்றி அரசியல் உயிர் வாழ்வுக்காக தனது பதவியை வகித்து வருகிறார். வன்செயல்களுக்கு இலக்கான ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை பலவீனமான ஒரு வாரிசிடம் ஜனாதிபதி பிரேமதாச விட்டுச் சென்றுள்ளார்.

நன்றி :

இன்டர்கோ பிரஸ்

## அ.இ.அ.தி.மு.க. உறவு பற்றி தமி.காங்கிரஸ்முடிவுசெய்யும்

மத்திய அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

அ. இ. அ. தி. மு. கவுடன் மீண்டும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக தமிழக காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் தான் முடிவு செய்யவேண்டும் என்று மத்திய அமைச்சர் கிருஷ்ணகுமார் கூறியுள்ளார்.

மதுரையில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில் காங்கிரஸ் கட்சியுடன் உறவை முறித்துக் கொள்வதாக அ. இ அ. தி. மு. க. தான் முதலில் அறிவித்தது என்றும் இவ் உறவு முறிவுக்கு காங்கிரஸ் கட்சி காரணமல்ல என்றும் சுட்டிக் காட்டினார்.

## பொலிசாரால் சுட்டுக்கொலை

சந்தனமரக் கடத்தல்காரன் எனப்படும் வீரப்பனைத் தேடிப் பிடிப்பதற்காக பம்கூர் காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தும் படையினருக்கும், அக் குழுவினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இருவர் கொல்லப்பட்டதாக காவல்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

## அரசியலில் மதம்; தடுக்க மசோதா !

அரசியல் ஆதாயத்துக்காகச் சமயத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்க வகை செய்யும் இரண்டு மசோதாக்கள் லோக்சபாவில் கொண்டு வரப்பட்டன.

மதம், இனம், சாதி மற்றும் மொழி அடிப்படையில் பல்வேறு வகுப்பு மக்களிடையே வெறுப்புணர்வைத் தூண்டுவோரை பதவி நீக்கம் செய்ய அரசியல் சாசன மசோதா வகை செய்கின்றது.

1951 மக்கள் பிரதி நிதித்துவ சட்டத்தைத் திருத்தக் கோருகிறது. மற்றொரு மசோதா. சமய அடிப்படை ...

பழநி, இராணிப்பேட்டை தொகுதிகளில்

## மத்திய படை பணி புரிவதை

புதிய சட்ட மூலங்களால்

## பாராளுமன்ற ஜனநாயகம் பேரிடிக்கு உள்ளாகலாம்

தக்காரர்கள், ஒட்டிகள் அக்கறையாகவுள்ளனரா? என்பது கேள்விக்குரியதே.

இதனை வலியுறுத்துமாப் போன்றே படுகொலை இடம்பெற்ற படகுகளில் ஒன்றில் பயணம் செய்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய வயோதிபரின் பத்திரிகைப் பேட்டியும் உள்ளது. நேரம் கடந்துவிட்டது, பாதுகாப்பு கிடைக்காது என அவர் வற்புறுத்தியும் ஒட்டிகள் அவரின் கூற்றிற்குச் செவிசாய்க்கவில்லை எனத் தெரிகின்றது. அதாவது, ஒரு சாதாரண பயணி அபாயத்தைப்பற்றி எச்சரித்த போதும், ஒட்டிகள் அதைப்புரிந்து கொண்டதாகவோ, அக்கறை காட்டியதாகவோ இல்லை.

மேலும், கிளாலிக் கடற்பரப்பில் பயணத்திற்குப் பயன்படுத்தும் வெளியிணைப்பு இயந்திரங்கள், அடிக்கடி பழுதாவதும், எரிபொருள் (மண்ணெய்) பற்றாக்குறையால் இடை நடுவில் படகுகள் தத்தளிப்பதும் அடிக்கடி இடம்பெறும் சம்பவங்கள் ஆகும். இதுபற்றி பயணிகள் அநேக புகார்கள்தெரிவிக்கின்றார்கள். இவை இரண்டும் பொருளாதாரத் தடை மற்றும் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட இன ஒடுக்கு முறையின் விளைவாக ஏற்பட்டதாயினும், படகுச் சொந்தக்காரர் தீவிர கவனமும், ஒட்டிகள் அக்கறையும் காட்டினால் இது தவிர்க்கப்படக் கூடியதொன்றேயாகும்.

ஏனெனில், இயந்திரத்தின் நிலையையும், அதற்கு தேவையான எரிபொருளின் அளவும் மதிப்பிட்டுக் கொள்வது கடினமான தொன்றல்ல. இந்நிலையில் தவறுகள் நிகழ்வதென்பது அக்கறையீனத்தினாலோ அன்றி லாபநோக்கமே தவிர வேறு ஒன்றும் காரணமாக இருக்க முடியாது.

ஆனால், இங்கு இந்நிலை சுட்டிக் காட்டப்படுவதானது படகு உரிமையாளர்கள் மீதோ அன்றி ஒட்டிகள் மீதோ குற்றம் காண்பதற்காக அல்ல. அவர்கள் செய்யும் சிறுதவறுகளும், அற்ப லாப நோக்கிலான விடயங்களும் அநேக அப்பாவிகளின் உயிரைப் பணயம் வைக்கும் ஒன்றாக, சிங்கள இனவெறியர்களுக்கு அப்பாவி மக்களைப் பலியிடும் நடவடிக்கைகளாகவும்மாறி வருகின்றது. அத்தோடு, தமது உடைமைக்கும் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் ஒன்றாகவும் மாறிவிடுகின்றது என்பதை சுட்டிக்காட்டவே ஆகும்.

இதேவேளை, பயணிகளும் பொறுப்புணர்ந்து செயற்படுதல் அவசியமானதாகும். இன்று குடாநாட்டிற்கான பயணம் பல நாட்களை வீணடிக்கும் நெருக்கடியான பயணம் என்பது உண்மையே. இதனால் விரைவில் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என விழைவதும் இயற்கையே. அதற்காக சில தவறான வழிமுறைகளைக் கையாண்டு தமக்கும் மற்றையவர்களுக்கும் ஆபத்தைத் தேடிக் கொடுத்து வருகின்றனர்.

இந் நிலையில் கிளாலிக் கடற்பரப்பில் இடம்பெறும் படுகொலையைத் தடுப்பதற்கு கடற்புலிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மக்களும், படகுச் சொந்தக்காரர்களும் ஒத்துழைக்கவேண்டும். கடற்புலிகள் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையே கொண்டுள்ளனர். அவற்றைக் கொண்டே சிங்கள கடற்படையுடன் போரிடும் அதேவேளை அவற்றை பாதுகாக்கவும் வேண்டும். இதன் காரணமாகவே பாதுகாப்பு வழங்கக்கூடிய நேரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், படகுச் சொந்தக்காரர்களினதும், மக்களினதும் ஒத்துழைப்பே அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய சூழ்நிலையைஉருவாக்கும். இல்லையேல் படுகொலைக்கான சந்தர்ப்பத்தையே கொடுக்கும்.

---

குண்டு வெடிப்புக்களில் ஆரம்பித்து ஒன்றன்பின் ஒன்றாக ஊழல்களில அவரது அரசாங்கம் இடறி விழுந்துள்ளது.

க்கு உள்ளாகும் அளவுக்கு அஸாத்தின் ஜமாத்-ஈ-இஸ்லாமிய கட்சியின் ஆதரவாளர்களை இத்தீர்ப்பு ஒன்று

வர்களில் ஒருவராக இருந்த அத்துலத்முதலி, ஜனாதிபதி ஜயவர்த்தனாவைத் தொடர்ந்து பதவிக்கு வருவார் என

நீதிமன்றத்தின் எதிர்பாராத இந்த தீர்ப்பு தேசிய மாகாண சட்டசபைகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியி—

நன்றி : இன்டர்கோ பிரஸ்

---

## அ.இ.அ.தி.மு.க. உறவு பற்றி தமி.காங்கிரஸ்முடிவுசெய்யும்

மத்திய அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

அ.இ.அ.தி.மு.கவுடன் மீண்டும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக தமிழக காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் தான் முடிவு செய்யவேண்டும் என்று மத்திய அமைச்சர் கிருஷ்ணகுமார் கூறியுள்ளார்.

மதுரையில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில் காங்கிரஸ் கட்சியுடன் உறவை முறித்துக் கொள்வதாக அ.இ.அ.தி.மு.க. தான் முதலில் அறிவித்தது என்றும் இவ் உறவு முறிவுக்கு காங்கிரஸ் கட்சி காரணமல்ல என்றும் சுட்டிக் காட்டினார்.

பழநி, இராணிப்பேட்டை தொகுதிகளில்

## மத்திய படை பணி புரிவதை மார்க்.கம்யூனிஸ்ட்கண்டனம்

(சென்னை)

பழநி, ராணிப்பேட்டை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் நடக்கும் போது மத்திய படைகளை ஈடுபடுத்துவது குறித்து மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியுள்ளது.

அக் கட்சி சென்னையில் நேற்றுமுன்தினம் வெளியிட்ட ஒரு அறிக்கையில், மத்திய படைகளைபணியில்ஈடுபடுத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையகம் கேட்டுக் கொண்டதையும், அதற்கு இணங்க மத்திய அரசு துணை இராணுவப் படைகளைஅனுப்பி இருப்பதையும் கண்டித்துள்ளது

தமிழ் மாநிலச் செயற் குழுவின் அறிக்கையில், மாநில அரசு இத்தகைய கோரிக்கை எதையும் விடுக்காத ஒருநிலையில், மத்திய அரசோ, தேர்தல் ஆணையகமோ உண்மையில் சட்டம்ஒழுங்குசீர்குலைந்திருப்பதாக கருதுமேயானால் அதற்கான ஆதாரங்களைக் காட்டி அதனை நிரூபித்து விட்டுத் தான் துணைப்படைகளை அனுப்பியிருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் தேர்தல் பிரசாரத்தில் அனைத்து கட்சிகளுக்கும் சம வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்எனவும், பாதுகாப்பு என்பதன் பெயரால் எதிர்க் கட்சிகளின் பிரசாரத்தை முடமாக்கும்செயல் எதிலும்மாநில அரசு ஈடுபடக்கூடாதுஎன்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

## கருத்துக் கணிப்பில் நரசிம்மராவ் முன்னணியில்

(டில்லி)

பிரதமர் நரசிம்மராவிற்கு பதிலாக யார் தகுதியான பிரதமர் என நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பெரும்பாலானவர்கள் நரசிம்மராவையே விரும்புவது தெரிய வந்துள்ளது.

மார்க் எனும் ஆய்வுக்குழு பதினேழாயிரம் மக்களிடையே நடத்திய கருத்துக் கணிப்பில் 60 சதவீதத்திற்கும் மேலானவர்கள் நரசிம்மராவிற்கு சமமாக யாரும் இல்லை என்றனர். 15 சதவீதத்தினர் சரத்பவார் அல்லது அர்ஜுன் சிங்கிற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பங்குத் தரகர் ஹர்சத் மேத்தாவிடம் நரசிம்மராவ் லஞ்சம் வாங்கினார் என்பதை நம்பமுடியாது என 35 சதவீதத்தினரும் லஞ்சம் வாங்கியிருக்கலாம் என 26 சதவீதத்தினரும், எவ்வித கருத்தும் கூற இல்லை என 39 சதவீதத்தினரும் கூறியுள்ளனர்.

## தெ. ஆபிரிக்க வன்முறையில் மேலும் 14 பேர் பலி

(யோகானஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் நேற்று முன்தினம் டோகோசா நகரிலும் போலோபர்க் முகாமிலும் நடந்த வன்முறைச் சம்பவங்களில் பதின்நான்குபேர் கொல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் இருவர் பொலிஸ்காரர்கள் ஆவர். மேலும் குறைந்தது முப்பதுபேர் வரை படுகாயம் அடைந்துள்ளனர். பல கட்டடங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

இதனிடையே சனியன்று திம்பிசா என்னுமிடத்தில் நடந்த படுகொலைகளில் பொலிசார் ஈடுபட்டதாகக் கூறப்படுவது பற்றி சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கோரியுள்ளது.

## பொலிசாரால் சுட்டுக்கொலை

சந்தனமரக் கடத்தல்காரன் எனப்படும் வீரப்பனைத் தேடிப் பிடிப்பதற்காக பம்கூர் காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தும் படையினருக்கும், அக் குழுவினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இருவர் கொல்லப்பட்டதாக காவல்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

புதிய சட்ட மூலங்களால்

## பாராளுமன்ற ஜனநாயகம் பேரிடிக்கு உள்ளாகலாம்

–பாரதீய ஜனதா தெரிவிப்பு

(டில்லி)

அரசியலில் இருந்துமதத்தை பிரிக்கக் கோரும் இரண்டு மசோதாக்களும் பலகட்சி பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறைக்கு பேரிடியாகும் என்று பாரதீய ஜனதா கூறியுள்ளது.

ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத் தீர்மானத்தில் மேலும், மதம், இனம், ஜாதி, மொழி என்பவற்றை தேர்தல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துவதை எதிர்ப்பதாகவும், அதே வேளை இதனைத் தடுக்க இப்போதுள்ள சட்டங்களே போதுமானது என்றும் கூறியுள்ளது.

அத்துடன் அரசியலிலிருந்து மதத்தைப் பிரிப்பது என்ற பெயரால் ஜனநாயகத்தை கட்டுப்படுத்தி அழிக்க முயற்சிக்கப்படுவதாக இத் தீர்மானத்தை வெளியிட்டுப் பேசிய பாரதீய ஜனதா தலைவர் எல். கே அத்வானி தெரிவித்தார்.

இத்தகைய சட்டத்தை உருவாக்குவதன் பின்விளைவுகளை காங்கிரஸ் அல்லாத மற்றக் கட்சிகள் உணரும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## காவிரி நீர்ப் பிரச்சினை பேச்சு மூலம் தீர்க்கத் தயார்

கர்நாடக துணை முதலமைச்சர்

(சென்னை)

காவிரிப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கக் கர்நாடக அரசு தயாராக உள்ளதெனவும் பேச்சுவார்த்தை மூலம் இதனைத் தீர்க்க முடியும் என்றும் அம்மாநிலத்தின் துணை முதலமைச்சர் திரு. எஸ்.எம் கிருஸ்ணா கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளுக்குத் தமிழக முதலமைச்சர் இசைவளிப்பாரேயானால் கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி சென்னைக்கு வந்து பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளத் தயாராகவுள்ளார் என நேற்று முன்தினம் கும்பகோணத்தில் செய்தியாளரிடையே பேசுகையில் அவர் தெரிவித்தார்.

கடந்த இருபது ஆண்டுகாலமாக பேச்சுவார்த்தை மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எதுவும் எட்டவில்லை என்பதைச் செய்தியாளர்கள் சுட்டிக்காட்டியபோது பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியாத பிரச்சினை எதுவும் உலகில் இல்லை எனவும் முழுமுயற்சியுடன் ஈடுபட்டால் தீர்க்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

காவிரி நீர்ப் பங்கீடு குறித்து கண்காணிப்புக் குழு ஒன்றைக் கர்நாடக அரசின் ஒப்புதலுக்குப் பிறகுதான் மத்திய அரசு அமைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியலில் மதம்; தடுக்க மசோதா!

அரசியல் ஆதாயத்துக்காகச் சமயத்தைப் பயன்படுத்துவதைத் தடுக்க வகை செய்யும் இரண்டு மசோதாக்கள் லோக் சபாவில் கொண்டு வரப்பட்டன.

மதம், இனம், சாதி மற்றும் மொழி அடிப்படையில் பல்வேறு வகுப்பு மக்களிடையே வெறுப்புணர்வைத் தூண்டுவோரை பதவி நீக்கம் செய்ய அரசியல் சாசன மசோதா வகை செய்கின்றது.

1951 மக்கள் பிரதி நிதித்துவ சட்டத்தைத் திருத்தக் கோருகிறது. மற்றொரு மசோதா. சமய அடிப்படையில் வாக்குகளைப் பெறுவதற்கான சமயப் பெயர் கொண்டுள்ள அரசியல்கட்சிகள் இருந்தால் அவற்றைப் போட்டியிடுவதிலிருந்து தவிர்க்கத்தேர்தல் ஆணைக்குழுவிற்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது. சமயப் பெயர்கள் உள்ள கட்சிகள் அந்தப் பெயர்களை மாற்றிக்கொள்ள இந்த மசோதா 90நாள்அவகாசம் அளிக்கிறது சமயப்பெயர்உள்ள அரசியல்கட்சி பதிவு செய்துகொண்டதை ரத்துச் செய்யக்கோரி உயர் நீதி மன்றத்துக்கு மனுச் செய்யவும் மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

### லெபனான் நடவடிக்கை

தென்லெபனானில் கெரில்லா நடவடிக்கைகளை கட்டுப்படுத்த லெபனான் அரசு இஸ்ரேலின் எல்லைக் கிராமங்களுக்கு துருப்புக்களை அனுப்ப முடிவு செய்துள்ளது. ஒருவார இஸ்ரேல் தாக்குதலில் 130 பேர் பலியாகியுள்ளனர். ஐ.நா. இடைக்கால அமைதிப் படையின் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களில் பணியாற்ற 40,000 வீரர்கொண்ட படைப் பிரிவு அனுப்பப்படும் என லெபனான் அறிவித்துள்ளது.

## அணு ஆயுத வலிமை இப்போது எமக்குண்டு

பாக். காபந்து பிரதமர் ஏற்பு

அணு ஆயுதம் தயாரிக்கக் கூடிய வலிமையை பாகிஸ்தான் பெற்றிருப்பதாக காபந்து அரசின் பிரதமர் குரோஷி ஏற்றுக்கொண்டுள்ளார்.

கடந்தசனிக்கிழமை இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய குரோஷி மேலும் கூறுகையில், பாகிஸ்தானுக்கு இப்போது அணு ஆயுதம் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்

புதுடில்லியுடனான பாகிஸ்தானின் உறவு குறித்து இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவரின் மதிப்பீட்டை ஏற்க மறுத்த குரோஷி இந்தியாவுடன் நட்புறவையே தமதுநாடு நாடுவதாகவும் தெரிவித்தார்.

### 7 பேர் இணைவு

ஜனதாதள் அஜித்சிங் பிரிவின் ஏழு எம் பிகள் நேற்று காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டனர். நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது காங்கிரசுக்கு ஆதரவாக இரகசியமாக செயற்பட்ட இவர்களின் இணைவினால் பாராளுமன்றத்தில் காங்கிரசின் பலம் 257 ஆக உயர்ந்துள்ளது.

# நான்கு மாவீரர் நினைவாக துக்கம் அனுஷ்டிப்பு

(மன்னார்)

போராளிகளின் குருதி எதிரியின் காவலரண்களில் உறைந்து கிடக்கின்றது. எனவே மாவீரர்கள் வீழ்ந்த இடங்களை நாம் மீட்டெடுக்க வேண்டும். இதனை மீட்டெடுக்கும் பொறுப்பு எமது இச் சந்ததியின் கைகளிலேயே உண்டுஎன மன்னார் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு நந்தகுமார் தெரிவித்தா .

கடந்த 29ஆம் திகதி மன்னார் உறிச்சட்டிப்பாலத்தடியில் எதிர்பாராதவிதமாக சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் றேமன், கப்டன் றேகன், லெப்டினன்ட் தம்பன், வீரவேங்கை எழில் வேந்தன் ஆகியோர் நினைவாக மன்னார் மாவட்டத்தில் நினைவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம் மாவீரர்களின் நினைவாக துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது இதன்போது விடுதலைப் புலிகளின் பாசறைகள், அலுவலகங்கள் யாவும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. அனைத்து வீதிகள், சந்திகள் யாவும் அலங்கரிக்கப்பட்டு கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

மடுவலயத்தில் மடு, தச்சனாமருதமடு ஆகிய இடங்களிலும் கூட்டங்கள் இடம்பெற்ற போது நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இக் கூட்டங்களில் திரு. பத்தன், திரு. செல்லத்தம்பு, திரு. நிகாஸ், மடுப்பிரதேச வட்டப் பொறுப்பாளர் அல்வின் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# அறிவித்தல்


## கலைக்கூடம் – யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ள கலைக் கூடத்தில் காட்சிக்கு வைப்பதற்கென எமது ஓவியங்கள், சிற்பங்கள். உலோகம், மரம் முதலானவற்றினாலான கலை கைப்பணிப் பொருட்கள், கலைசம்பந்தப்பட்ட நூல்கள் முதலானவைகளைத் தந்துதவும் வண்ணம் கலைஞர்களையும் கலையார்வம் மிக்க பொது மக்களையும் கேட்டுக் கொள்கின்றோம். இக் கலைக் கூடத்தில் காட்சிக்கு வைப்பதற்கு இவைகளை விற்க விரும்புவோரையும், அன்பளிப்புச் செய்ய விரும்புவோரையும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் காட்சிக்கு வைப்பதற்கு விரும்புவோரையும், 93-8-20 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சு. டிவகலாலா
செயலாளர்,
கலைக்கூடம் அமைப்புக்குழு

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
93. 08 02

(சி/7121)




4-வது வெற்றுப்போத்தல் குலுக்கல் போட்டி பரிசு பெறுவோர் விபரம் பின்வருமாறு:

| பரிசு | இல. | பெயர் | விலாசம் |
|---|---|---|---|
| (1) | 2764 | R. வரதன் | 961, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| (2) | 2358 | தேவநேசன் | எவ்லேன். உடுவில். |

## நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்காலிக அதிபர்களாக கடைமையாற்றியவர்களுக்கு அதிபர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலினை யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் கல்விச் சேவை சபையிடம் சமர்ப்பித்துள்ளார்.

மேலும் இவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான கடிதங்களை கல்விச் சேவைகள் சபை தபால் மூலம் உரியவர்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது. [பா]

## போமலின் பாவிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் உள்ள பிரேதஅறைகளில் உடல்கள் கெடாமல் பாதுகாப்பதற்கு போமலினை பயன்படுத்த இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெரிய இரும்புப் பெட்டிகளில் இவ்உடல்களை வைத்து கெடாமல் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (சி)

தமிழ்நாட்டிலிருந்து

## 1200 தமிழ் அகதிகள் 12ஆம் திகதி வருவார்கள்

(சென்னை)

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை அகதிகள் 12ஆம் திகதி முதல் திருப்பியனுப்பப்படவுள்ளனர். முதற்கட்டமாக 1200 அகதிகள் சென்னையிலிருந்து எம். வி.நிக்கோபார் என்ற கப்பலில் திருமலை வருவர். இக்கப்பலுக்கு பாதுகாப்பாக இந்திய கடற்படையும் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது முன்னதாக அகதிகளை ஏற்ற அகதிகளுக்கான ஐ நா உயர்ஸ்தானிகராலயம் சிங்கப்பூர்நிறுவன கப்பல்களை இலவசமாக வழங்க முன்வந்த போதிலும் இந்தியா அதை நிராகரித்து தனது கப்பலை இப்பணியில் ஈடுபடுத்தியுள்ளது

## நெல்லியடி பெண்ணின் சடலம் இனம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இளாலி கடற்பரப்பில் கடற்படையினரின் தாக்குதலுக்குப் பலியான நெல்லியடியைச்சேர்ந்த பெண்மணியின் சடலம் நேற்றுக் காலை 9 00 மணியளவில் அவரது கணவரால் அடையாளம் காணப்பட்டது.

கடந்த வியாழனன்று இளாலிக் கடற்படையின் தாக்குதலில் பலியான இரு பெண்களின் சடலங்கள் நேற்றுமுன் தினம் வரை அடையாளம் காணப்படாமல் யாழ். போதனாவைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

அவற்றில் ஒன்று நெல்லியடி மகாத்மா வீதியைச் சேர்ந்த மதுரநாயகம் அமிர்தநாயகி (வயது 39) என்னும் பெண்மணியுடைய தென அவரது கணவரால் நேற்று அடையாளம் காணப்பட்டது.

இதேவேளை மீதமுள்ள மற்றய சடலம் நேற்றும் அடையாளம் காணப்படாததனால் இன்று அதனைத் தகனம்செய்யவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

### உண்ணாவிரதி

பட்டவராவார். மேலும் ஏழுபேர் நடக்கமுடியாத நிலையில் படுத்தபடுக்கையாக உள்ளனர்.

மேலும் இக் கைதிகளில் அநேகருக்கு வாந்தி, வயிற்றோட்டம் என்பன ஏற்பட்டுள்ளன பலர் பேசக்கூட முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

### பிரயோக

23 ஆம் 24 ஆம் திகதிகளில் காலை 8. 30 மணிக்கு நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறி

## வவுச்சர்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்கு வந்துள்ளன. வரும் ஆறாம் திகதி இவை ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

# 'லங்கா' சஞ்சிகையில் "சுதந்திரப் பறவைகள்"

(ஸ்ரொக்கோம்)

சுவீடன் உப்ஸலாப் பல்கலைக் கழகத்தின் கலைப் பீடத்தின் வெளியீடான இலங்கைப் பண்பாடுகள் பற்றிய ஆய்வுகளை தாங்கிவரும் லங்கா என்ற சஞ்சிகையில் இம்முறை சுதந்திரப் பறவைகள் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. பேராசிரியர் பீற்றர் ஷோல்க் எழுதிய மேற்படி நூறுபக்க கட்டுரையில் 'சுதந்திரப் பறவைகள்- ஆயுதப் போரில் தமிழ் பெண்களின் பங்கு' என்ற தலைப்பில் காணப்படுகிறது.

இந் நூல் சிறிலங்கா சுங்கப் பகுதியினரால் இலங்கையினுள் வர தடை செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

### பட்டதாரி

சேவை சபையிடம் ஒப்படைத்திருந்தார். இதனைத் தொடர்ந்து கல்விச் சேவை சபையினர்மேற்படி பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பி வைப்பதாகவும் இவர்களின் நியமனங்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.இவர்களுக்கான நியமனங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள கஷ்டப் பிரதேசங்களிற்கே வழங்கப்படவுள்ளதாக யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர்தெரிவித்துள்ளார்.(பா)

### பிளாஸ்ரிக்

இவற்றைக் கொண்டு வந்தவர்களிடமிருந்து அவை பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 02-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10534

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

### தொடர்புகொள்க

விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் கிருமிநாசினி வகைகளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு விண்ணப்பித்த மூவர்களை தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் அரசாங்க அதிபர் மேற்படி முகவர்களை கொழும்பிலேயே தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார் (சி)

## மருந்துகள் வந்தன

திருகோணமலைக்கு சென்று திரும்பிய குமண கப்பலில் அங்கிருந்து யாழ். போதனா மருத்துவ மனைக்கு ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் திருக்கோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு வந்து அன்றேதிரும்பிச்சென்றகுமணவில் திருக்கோணமலைதுறைமுகத்தில் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த மருந்துப் பொருள்களே எடுத்துவரப்பட்டுள்ள மருந்துகளென தெரியவருகின்றது. (சி)

### ஆதாரம் காட்டி

கைக்கடிகாரமும், ஒரு சோடி தோடும், ஓர் எஸ் வடிவில் அமைந்த கொழுக்கியும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றிற்குரியவர்கள் தகுந்த ஆதாரத்தினைக் காட்டி மேற்படி சோதனை நிலையத்தில் இவற்றை பெற்றுக் கொள்ளும்படி பொதுமக்களிற்கு, போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் அறியத்தருகின்றனர்.

# காணவில்லை

மாவை கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இ. சிதம்பரநாதக் குருக்களை காணவில்லை. கண்டவர் தகவல் தரவும். றோஸ் நிற சேட் அணிந்தவர், கறுப்பு, உள்வளையல் (42 வயது) தலை மயிர் ஒட்ட வெட்டியுள்ளவர்

சு. சிவசண்முகானந்தக் குருக்கள்

ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி,
140, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

ஸ்ரீமாவை விநாயகர்
சோதிட நிலையம்
158, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு.

(5609)

# வேலை வாய்ப்பு

## உதவி உற்பத்தி முகாமையாளர்
## (ASSISTANT PRODUCTION MANAGER)

மேற்படி வெற்றிடத்திற்கு பின்வரும்தகுதியுடைய விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்களை 10 - 08 - 1993 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

தகுதி:

(அ) வயது: ஆகக் கூடியது 30–பெண்.

(ஆ) கல்வித் தகைமை: ஆகக் குறைந்தது க.பொ.த. (உ/தர) சித்தி.

(தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்க வேண்டும்.)


பல்கலைக்கழகத்தில் இரசாயனம் அல்லது தாவரவியல் ஆகிய பாடங்களை பயின்ற பட்டதாரி ஆயின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(இ) 1) அனுபவம்: உணவு பதனிடல் தொடர்பானஅறிவு.

2) உணவு பதனிடல் தொழிலில்முன்பு வேலை செய்த அனுபவம் என்பன மேலதிகத் தகுதியாகக் கருதப்படும்.

சு. டிவகலாலா

உள்ளூராட்சித் திணைக்களம், செயலாளர்,
யாழ்ப்பாணம். கலைக்கூடம் அமைப்புக்குழு
93. 08 02 (சி/7121)




4-வது வெற்றுப்போத்தல் குலுக்கல் போட்டி பரிசு பெறுவோர் விபரம் பின்வருமாறு:

| பரிசு | இல. | பெயர் | விலாசம் |
|---|---|---|---|
| (1) | 2764 | R. வரதன் | 961, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| (2) | 2358 | தேவநேசன் | சுவ்லேன், உடுவில். |
| (3) | 950 | S. தயாபரன் | 127, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். |

**ஆறுதல் பரிசுகள்:**

(1) 1597, திருமதி I குணலசிங்கம், C/o M பஞ்சாட்சரம், 547, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (2) 2219 ப. காந்தி நவண வீதி, நவிண்டில். (3) 2757 L H J. ஜீவா, 31, Cathedral, Street Jaffna. (4) 2763, ல. ஜீவா 31, சுதிட்ரல் வீதி, யாழ்ப்பாணம் (5) 1927 திருமதி தேவராசா, பிளவத்தை. (6) 1582 செ. சிவராசா அண்ணா கோப்பி (7) 956, E. Jacintha, 1st Lane, Valampuram, Colombogam, Jaffna (8) 2238, செலுநறன், கொலண வீதி, நவிண்டில். (9) 2001, பாமா, கல்வயல், சாவகச்சேரி. (10) 1922, ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், மூளாய்.

5 வது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள். பங்குபற்றுவதற்கான நிபந்தனை: ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஓர் அதிர்ஷ்ட லாபச்சீட்டையும் பெற்றுக் கொள்ளவும். புதிய முகவரான பேரம் லம் மருந்துக் கடை, சுன்னாகத்திலும் போத்தல்களை ஒப்படைத்து அதிர்ஷ்ட லாபச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-7117)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

## அமரர் திரு. ஐ. செல்வராஜா

(லொறி உரிமையாளர் 27 ஸ்ரீ 9063)

தோற்றம்: 31 07 - 1344 மறைவு: 04 - 07 - 1993

அன்பின் ஆருயிர் அப்பாவே
எங்களை தங்கள் ஆசைமுகம் காணாது
தவிக்கும் எங்களை இளம் வயதிலே
தவிக்கவிட்டு பிரிந்து இறைவடி சேர்ந்தீர்களே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

மரணக் கிரியையில் கலந்து கொண்ட அனைவரையும் 03-08 93 இன்று அந்தியேட்டிக் கிரியைக்கு வருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

ஆனந்தம் வைரவர் கோவில் லேன் மனைவி புஸ்பராணி
புதுமடம், மானிப்பாய். பிள்ளைகள்

(5608)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு

திலில் பலியான இரு பெண்களின் சடலங்கள் நேற்றுமுன் தினம் வரை அடையாளம் காணப்படாமல் யாழ். போதனாவைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

அவற்றில் ஒன்று நெல்லியடி மகாத்மா வீதியைச் சேர்ந்த

உண்ணாவிரதி

பட்டவராவார். மேலும் ஏழுபேர் நடக்கமுடியாத நிலையில் படுத்தபடுக்கையாக உள்ளனர்.

மேலும் இக் கைதிகளில் அநேகருக்கு வாந்தி, வயிற்றோட்டம் என்பன ஏற்பட்டுள்ளன பலர் பேசக்கூட முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

**பிரயோக**

23 ஆம் 24 ஆம் திகதிகளில் காலை 8. 30 மணிக்கு நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதேவேளை நேற்று நடைபெற்ற பிரயோககணித பரீட்சையை எழுதிவந்த மாணவர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (11)

(சி)

## வவுச்சர்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்கு வந்துள்ளன. வரும் ஆறாம் திகதி இவை ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர்களுக்கான நியமனங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள கஷ்டப் பிரதேசங்களிற்கே வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா)

**பிளாஸ்ரிக்**

இவற்றைக் கொண்டு வந்தவர்களிடமிருந்து அவை பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கபடுகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 02-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10534

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-5036, 43-4045, 26-3321, 26-2972, 27-9791
26-9797, 27-0802, 42-9326, 41-2979, 28-2156
24-0576, 24-4390, 28-9917, 26-7949.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0763, 42-1722, 26-0669, 41-9167.

# ஓராண்டு நினைவலைகள்





**லெப். விவேக்கா**
சத்தியவாணி குணதுங்க
குறிஞ்சி நகர், வாழைச்சேனை,
மட்டக்களப்பு.
பிறப்பு: 1973-08 28

**லெப். நிரந்தரி**
இராஜேஸ்வரி தர்மலிங்கம்
மொறக்கட்டாஞ்சேனை,
மட்டக்களப்பு.
பிறப்பு: 1972-04-15

வீரச்சாவு: 1992-08-03

புயல் பொங்கும்
மட்டுநகர் மண்ணிலே
எழுந்த புலிகள் நீங்கள்
களம் கண்டு
உளம் நிறைந்த
ஓராண்டின் நினைவலையில்
நனைகின்றோம் நாம் இன்று
மலர்ந்தும் மலராத
பொழுதில் மண்ணில்
கலந்துவிட்ட உங்கள்

குருதியில் ........
பதிந்துபோன காலடிச்
சுவடுகளில்........
பல்லாயிரம் விதைகள்
முளைவிடும்
அவை
நாளைய விடியலுக்காய்
பூத்து நின்று
மணம் பரப்பும்

—தோழிகள்

(சி/7119)

மேற்படி வெற்றிடத்திற்கு பின்வரும்தகுதியுடைய விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்களை 10 - 08 - 1993 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்,

தகுதி:

(அ) வயது: ஆகக் கூடியது 30–பெண்.

(ஆ) கல்வித் தகைமை: ஆகக் குறைந்தது க.பொ.த. (உ/தர) சித்தி.

(தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்க வேண்டும்.)

பல்கலைக்கழகத்தில் இரசாயனம் அல்லது தாவரவியல் ஆகிய பாடங்களை பயின்ற பட்டதாரி ஆயின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(இ) 1) அனுபவம்: உணவு பதனிடல் தொடர்பான அறிவு.

2) உணவு பதனிடல் தொழிலில்முன்பு வேலை செய்த அனுபவம் என்பன மேலதிகத் தகுதியாகக் கருதப்படும்.

(ஈ) வேதனம்: அனுபவம் தகுதிகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி,
நிர்வாக முகாமையாளர்
**TASTE LINE INDUSTRIES (PVT) LTD**
இல. 14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி/7118)

# மரண அறிவித்தல்

திருமதி

## இராசமுத்து திக்கம் செல்லையாபிள்ளை

திருமதி இராசமுத்து திக்கம் செல்லையாபிள்ளை 2 - 8 - 93 நேற்று காலமானார். அன்னார் பொலிகண்டி கந்தவன ஆதீன கர்த்தர் காலம்சென்ற திக்கம் செல்லையா பிள்ளையின் அன்பு மனைவியும், கந்தவன ஆலய ஆதீன கர்த்தர் காலஞ்சென்ற யோகேந்திரன், திருமதி நாகபூசணி – பார்ப்பதிபொன்னம்மை (இளைப்பாறிய இசை விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), யோகாம்பிகை (இளைப்பாறிய இசையாசிரியை இராமநாதன் கல்லூரி), சிவயோகநாயகி (உப அதிபர் ஆசிரிய பயிற்சி கலாசாலை கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற பத்மநாதன், இராமநாதன் கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இரத்தினம், இராசக்கோன், திரவியம் ஆகியோரின் பிரிய சகோதரியும், ஜெயமனோகரி - ஸ்கந்தாரணியம் (கனடா), செல்லையா பிள்ளை (ஓமான்), குழந்தைவேலு (கனடா), றஞ்சன் (கனடா), ரமேஸ் (கனடா), குமரன் (இந்தியா), சுமதி (கொழும்பு), கார்த்தியாயினி (கொழும்பு), விஜயலட்சுமி (கனடா), தங்கராணி (ஓமான்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனகன், அபிராமி, தாட்சாயணி, அங்காசுதன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். ஈமக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 2 - 8 - 93 மாலை 4. 00 மணிக்கு நடைபெற்று ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பார்ப்பதி (ராயர்)
திக்கம் செல்லையாபிள்ளை

கந்தவனம்,
பொலிகண்டி.

(5604)